செய்தி வெளியீடு எண்: 01 நாள்: 13.01.2026

**ஆளுநர் விருது – 2025 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகள் வென்றவர்களின் விவரங்களை மக்கள் மாளிகை, தமிழ்நாடு அறிவிக்கிறது.**

**ஆளுநர் விருதுகள்-2025 'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு'** ஆகிய பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்குவதில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக விருதுகள் வென்றவர்களின் விவரங்களை மக்கள் மாளிகை, தமிழ்நாடு மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. கடந்த ஆண்டு 17 ஜூன் 2025 அன்று இவ்விருதுகளுக்கான அறிவிப்பினை தமிழ்நாடு மக்கள் மாளிகை வெளியிட்டது. இந்த இரு விருதுகளும் சமூக சேவை மற்றும் சுற்றுசூழல் பாதுகாப்பில் ஈடுப்பட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் தன்னலமற்ற சேவையை அங்கீகரித்து அவர்களை பாராட்டி ஊக்குவிப்பதற்காக மக்கள் மாளிகை சார்பாக அறிவிக்கப்பட்டது.

இவ்விருதுகளுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட முக்கிய பிரமுகர்களை உள்ளடக்கிய தேர்வுக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு, அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், **'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு'** ஆகிய இரு பிரிவுகளின் கீழ் விருதுகள் வென்றவர்களின் விவரங்கள் பின்வருமாறு:

| பிரிவுகள் | நிறுவனம் | தனிநபர் |
|---|---|---|
| **சமூக சேவை** | வெங்கட்ராமன் நினைவு அறக்கட்டளை (செங்கல்பட்டு மாவட்டம்) | 1. திரு. ஆர். சிவா (சென்னை மாவட்டம்)<br><br>2. திரு. பி. விஜயகுமார் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) |
| **சுற்றுச்சூழல் பாதுகாப்பு** | பசுமை ராமேஸ்வரம் அறக்கட்டளை (இராமநாதபுரம் மாவட்டம்) | திரு. ஆர். மணிகண்டன் (கோயம்புத்தூர் மாவட்டம்) |

**<u>'சமூக சேவை' – நிறுவனம்</u>**

**'வெங்கட்ராமன் நினைவு அறக்கட்டளை'** (**செங்கல்பட்டு மாவட்டம்)** அமைப்பானது கோவளம் கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதற்கும், கல்வியின் ஒட்டுமொத்த தரத்தை உயர்த்துவதற்கும் சேவை செய்து வருகிறது. இவ்அமைப்பின் முயற்சிகளை பாராட்டி இவ்விருதுடன் ரூ. 5 லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம்) ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

**<u>'சமூக சேவை' - தனிநபர்கள்</u>**

- **திரு. ஆர். சிவா** (சென்னை மாவட்டம்) அவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வு மற்றும் சமூக மறுசீரமைப்பிற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். அவர்கள் சமூகத்தில் இணைவதற்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கும் அவர் உதவி வருகிறார். அவரது சிறப்பான பங்களிப்புகளுக்காக, அவருக்கு இவ்விருதும், ரூ. 2 லட்சம் (ரூபாய் இரண்டு லட்சம்) ரொக்கப் பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்.
- **திரு பி.விஜயகுமார்** (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) தனது தன்னலமற்ற சேவை மூலம் கைவிடப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத சடலங்களுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்து அவர்களுக்கு கண்ணியமான பிரியாவிடையை உறுதி செய்கிறார். மேலும், இவர் ஒரு இலவச நூலகத்தை நிறுவியுள்ளார் மற்றும் நலிந்தவர்களுக்கு தினசரி அன்னதானம் வழங்கி வருகிறார். இது விளிம்புநிலை சமூகங்களுக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. அவரது சேவையை அங்கீகரிக்கும் விதமாக, இவ்விருதும், ரூ. 2 லட்சம் (ரூபாய் இரண்டு லட்சம்) ரொக்கப் பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்.

**<u>'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' - நிறுவனம்</u>**

**'பசுமை ராமேஸ்வரம் அறக்கட்டளை'** (இராமநாதபுரம் மாவட்டம்) அமைப்பானது இராமேஸ்வரம் பகுதியின் கடலோரப் பகுதி உட்பட, அங்குள்ள நீர்நிலைகள் மற்றும் தாவரங்கள், விலங்கினங்களைப் புத்துயிர் பெறச் செய்வதில் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருகிறது. மேலும், கழிவு மேலாண்மை,

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவித்தல் மற்றும் பள்ளி குழந்தைகளிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வைப் பரப்புதல் ஆகியவற்றிலும் முக்கிய பங்களிப்பை அளித்து வருகிறது. இந்த அறக்கட்டளையின் முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக இவ்விருதும் ரூ. 5 லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம்) ரொக்கப் பரிசும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

**‘சுற்றுச்சூழல் பாதுகாப்பு’ - தனிநபர்**

**திரு. ஆர். மணிகண்டன்** (கோயம்புத்தூர் மாவட்டம்) 'கோவை குளங்கள் பாதுகாப்பு அமைப்பு’ என்ற அமைப்பை நிறுவி, கோயம்புத்தூர் முழுவதும் உள்ள நீர்நிலைகளைப் புத்துயிர் பெற வைப்பதிலும், பல்லுயிர் பெருக்கத்தை மீட்டெடுப்பதிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். அவரது சேவையை அங்கீகரிக்கும் விதமாக, இவ்விருதும், ரூ. 2 லட்சம் (ரூபாய் இரண்டு லட்சம்) ரொக்கப் பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்படும்.

மேற்படி **'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு'** ஆகிய விருதுகள் அறிவிக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு வருகின்ற **26.01.2026** அன்று சென்னை மக்கள் மாளிகையில் நடைபெற உள்ள குடியரசு தின வரவேற்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள்.

.........................................................................................................................................................................

மக்கள் மாளிகை, சென்னை-22 வெளியீடு-

நாள்: 13.01.2026 மக்கள் தொடர்பு அலுவலகம்